செய்தி வெளியீடு எண்: 360 நாள் : 18.07.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (18.07.2016) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை குறித்த கலந்தாய்வுக் கூட்டம் சென்னை, தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தொழில் வணிகத் துறை, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ), தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி), தொழில் முனைவோர் பயிற்சி நிறுவனம், மாவட்ட தொழில் மையங்கள், தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி), சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் (சேகோசர்வ்), தமிழ்நாடு சிறு தேயிலை விவசாயிகளின் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இணையம் (இண்ட்கோவசர்வ்) ஆகியவைகளின் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் துறைகளின் தொடர்பான திட்ட அறிவிப்புகளின் நிலை மற்றும் கடந்த ஐந்தாண்டுகளில் (2011–2016ஆம் ஆண்டுகளில்) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் அரசு முதன்மை செயலாளர் திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.அம்புஜ் சர்மா, இ.ஆ.ப., தொழில் வணிக துறையின் கூடுதல் ஆணையர் திருமதி. ரீட்டா ஹரிஸ் தாக்கர், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**